# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1686/50 - 2011 ජනවාරි 01 වැනි සෙනසුරාදා - 2011.01.01

*1686/50 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ. - பீ. 10/2009.*

***(423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்***

*17 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியமைப்பினது 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், கட்டளையின் மூலம் -*

*(1) இலங்கையில் வதிவுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கம்பெனிக்கு அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்காண்மைக்கு கீழே (3) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட பணிப்புகளுக்கமையவும் காலத்துக்குக்காலம் என்னால் வழங்கப்படும் வேறு ஏதேனும் பணிப்பிற்கமையவும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளையும் வெளிநாட்டு அரசாங்கங்களினாலும் அப்போதைக்கு இலங்கை இறைமைக் கடன் தரப்படுத்துதலின் மீது அல்லது அதற்கு மேல் தரப்படுத்தப்பட்ட அரசாங்க ஒழுங்கமைப்புகளினாலும் வழங்கப்பட்ட இறைமை முறிகளையும் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் கைமாற்றுவதற்கும் அனுமதி அளிக்கின்றேன் ;*

*ஆயினும், இது பின்வருவன தொடர்பில் ஏற்புடையதாதலாகாது :-*

(i) *2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட ஏதேனும் கம்பனி ;*

(ii) *அரச சார்பற்ற ஏதேனும் ஒழுங்கமைப்பு ;*

(iii) *செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எந்த ஆளுக்கு, கம்பனிக்கு அல்லது பங்காண்மைக்கு எதிராக செய்யப்பட்ட துடர்ச்சியொன்று தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் முடிவுறாதிருக்கின்றனவோ அந்த எவரேனும் ஆள், ஏதேனும் கம்பனி அல்லது பங்காண்மை.*

*(2) பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு ஆளும், கம்பனியும் அல்லது பங்காண்மையும்-*

(i) *மேலே (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புரைகளுக்கமைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் ஆரம்பிக்கப்பட்ட வெளிச்செல் முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்து மாத்திரமே வெளிச்செல் அனுப்புகைகளைச் செய்ய வேண்டும் எனவும் ;*

(ii) *கொடுப்பனவுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் எல்லாப் பங்கிலாபங்கள், மூலதன ஆதாயங்கள், பங்குகளின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள், கலைத்தல், அல்லது வெளிநாட்டுக் கம்பெனியொன்றிடமிருந்து பெறப்படற்பாலதானதும் எந்த வெளிச்செல் முதலீட்டுக் கணக்கின் ஊடாக ஆரம்ப முதலீடு செய்யப்பட்டதோ*

அந்த வெளிச்செல் முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதுமான மூலதனக் குறைப்பு விற்பனை வருவாய்களையும், மூலதன ஆதாயங்கள் உட்பட, எவையுமிருப்பின், அத்தகைய வெளிநாட்டு முறிகள் மீது ஈட்டப்பட்ட வட்டியுடன் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும் எனவும் ;

(iii) அத்தகைய விதப்புரை வழங்கப்பட்ட நேரத்தில் தொழில்முறையில் ஈடுபடுவதற்கு செல்லுபடியான சான்றிதழைத் தமது உடைமையில் கொண்டுள்ள இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் ஒருவரிடமிருந்து விதப்புரையொன்றுடன் சேர்த்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் ;

(iv) உட்பந்தி ((iii) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட வேண்டுகோள் ஒவ்வொன்றுடனும் வேறு எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஊடாக வெளிச்செல் அனுப்புதொகை எதுவும் பயனுறுத்தப்படவில்லை எனவும் வெளிநாட்டிற்குக் குடிபெயரும் நோக்கத்திற்கு அந்நிய செலாவணி விடுதொகையைப் பெறுவதற்கு விண்ணப்பம் எதுவும் அனுப்பப்படவில்லை எனவும் குறிப்பிடும் சத்தியக் கடதாசியொன்றைச் சமர்ப்பிக்குமாறும் ;

(v) பந்தி (3) என்பதில் தரப்பட்டுள்ள வரையறைகளை விஞ்சிய முதலீடொன்றைச் செய்வதற்கு முன்னர் நிதி அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறவேண்டும் எனவும் ;

(vi) செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகரால் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களையும் தகவலையும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும்

பணிக்கின்றேன்.

(3) எவரேனும் ஆளுக்கு, ஏதேனும் கம்பனிக்கு அல்லது பங்காண்மைக்கு (1) ஆம் பந்தியின் கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் அனுமதி தொடர்பில் பின்வரும் வரையறைகள் நடைமுறையிலிருத்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன்:-

(i) கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்று தொடர்பில் ஆண்டொன்றுக்கு ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர் ($ 500,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையொன்று ;

(ii) கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்படாத கம்பனியொன்று தொடர்பில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் ($ 100,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையொன்று ;

(iii) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள பங்காண்மையொன்றின் தொடர்பில் பங்காளர் ஒவ்வொருவராலும் அனுப்பப்படவுள்ள தொகையை ஈடுசெய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு வரி இசைவுச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கமைய ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் ($ 100,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையொன்று ;

(iv) இலங்கையில் வதிவுள்ள எவரேனும் தனியார் தொடர்பில் அனுப்பப்படவுள்ள தொகையை ஈடுசெய்வதற்கு வரி இசைவுச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்கமைய ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் ($100,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையொன்று ;

(v) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றிற்குரிய இலங்கையிலுள்ள கிளை அல்லது துணைநிலையொன்றின் தனியாளாகிய ஊழியர் ஒவ்வொருவருக்கும் ஊழியர் பங்கு விருப்புத் தெரிவு செயற்திட்டத்தின் கீழ் அத்தகைய கம்பனியின் பங்குகளைக் கொள்ளுவதற்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் ($100,000) அல்லது நிர்ணயிக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையொன்று ;

ஆயின், எவ்வாறாயினும் இலங்கையிலுள்ள கிளையின் அல்லது துணை நிலையின் எல்லா ஊழியர்களாலும் கொள்ளப்படக்கூடிய பங்குகளின் அதிகபட்ச எண்ணிக்கை இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியால் வழங்கப்பட்ட மொத்தப் பங்குகளின் பெறுமதியின் ஐந்து சதவீதத்தை (5%) விஞ்சுதலாகாது.

(4) (i) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் போனஸ் வழங்கீட்டின் கீழான பங்குகள், ஒதுக்கங்களை மூலதனமாக்குதலின் மூலம் பெறப்பட்ட பங்குகள் என்பனவும் இக்கட்டளையைப் பின்பற்றி கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ii) இக்கட்டளையில் அடங்கியுள்ள எதுவும் ஏற்கனவே அளிக்கப்பட்ட விலக்களிப்பு தொடர்பில் மாத்திரம் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட தொழில் முயற்சிகளைப் பாதிப்பதாகவோ அல்லது அவற்றின் மீது தொடர்பு கொண்டிருப்பதாகவோ பொருள் கொள்ளப்படுதலாகாது.

(5) இக்கட்டளையில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்" என்பது (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் எனப் பொருள்படும் ;

"வெளிநாட்டுக் கம்பனி" என்பது, இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படாத ஒரு கம்பனி எனப் பொருள்படும் ;

"வெளிநாட்டு நாணயம்" என்பது (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ள அந்தச் சொல்லமைப்பிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"உரிமம்பெற்ற வர்த்தக வங்கி" என்பது உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றாகத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின்கீழ் உரிமமொன்று வழங்கப்பெற்ற ஒரு கம்பனி அல்லது நிறுவனம் என்று பொருள்படும் ;

"இலங்கையில் வதியுள்ளவர்" என்பது செலாணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு 1972, ஏப்பிறல் 21 ஆந் திகதி கொண்ட 1,5007 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பணிப்புகளில் அச்சொல்லமைப்பிற்குக் குறித்துரைக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருக்கும் ; அத்துடன்

"துணைநிலை" என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2011, சனவரி 01.

1- 314

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.